# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 19/2025

## PROSECUTION WITNESS No – PW10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சரவணன்** | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of March 2026.**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.**

**எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது குளித்தலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 03.12.2019 ஆம் தேதியன்று 22.00 மணிக்கு அரவக்குறிச்சி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் ஜான்சன்பேட்டை, சேலம் கிளையின் ஓட்டுநர் திரு.கோவிந்தராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துப்பூர்வமான புகார் கொடுத்தார். அந்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அ.சா.ஆ.1 புகாரை பெற்று அரவக்குறிச்சி நிலையக்குற்ற எண்.419/2019, ச.பி. 3(1) TNPPDL Act என் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகாரையும், மேலும் வாதி ஆஜர் படுத்திய அ.சா.பொ.1 ஒரு கருங்கல்லையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கையின்

ஒரு பிரதியை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.பொ.1 கருங்கல்லை நான் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். புகாரில் புகார்தாரர் சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் நடத்துனரும், பயணிகளும் இருந்ததாக கூறியுள்ளார். வாதி அ.சா.ஆ.1 புகாரை உங்களிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் வழக்கிற்காக உங்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.18 18:00:34 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.